Registered as a Newspaper in Ceylon ★ ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

மலர் 7 இதழ் 57

National Tamil Daily தேசிய தினசரி

குரோதி பங்குனி 26 துல்ஹஜ் பிறை 5 (8 4 65) வியாழக்கிழமை

## கைக்கெட்டியது வாய்க்கெட்டுமா?

கொழும்பு, வெள்ளி

மேல்படிப்புக்காக பல்கலைக் கழகத்தில் சேர்ந்துவிட வேண்டும் என்று தங்கள் சக்தி முழுவதையும், நேரம் முழுவதையும் செலவழித்து படிக்கும் மாணவர்கள் லட்சக்கணக்கானோர். ஆயினும் பரீட்சையில் உரியபுள்ளிபெற்று பல்கலைக்கழகத்தில் சேருவோர் நூற்றுக்கணக்கானோரே. இதுவரையும் புகுமுக பரீட்சையில் நான்கு பாடங்களில் நாற்பது புள்ளிகளுக்கு கூடுதலாக பெறுபவர்கள் பல்கலைக் கழகத்தில் சேர்க்கப்பட்டார்கள். ஆனால் இம்முறையோ நான்கு பாடங்களில் நாற்பது புள்ளிகளுக்கு கூடுதலாகப் பெறும் எல்லோரும் பல்கலைக் கழகத்தில் அனுமதிக்கப்படுவார்கள் என்பது சந்தேகமே!

இலங்கையில் உள்ள மூன்று பல்கலைக் கழகங்களும், பரீட்சையில் வகுக்கப்பட்டுள்ள தகுதியைபெற்ற அத்தனை மாணவர்களையும் உடனடி நடவடிக்கை எடுக்காவிடில் சேர்த்துக்கொள்ளமுடியாது என கல்வி இலாகாவுக்கு அறிவித்துள்ளன.

பல்கலைக் கழகங்களில் இடவசதி போதாது எனவும் வடக்கிலும், தெற்கிலும் இரண்டு புதிய பல்கலைக் கழகங்கள் நிறுவப்படவேண்டும் எனவும் பல்கலைக்கழக உபவேந்தர் முன்னரே கல்வி அமைச்சுக்கு சிபார்சு செய்திருந்தார். (6-ம் பக்கம் பார்க்க)

கடற்படை

# கமிஷன் அறிக்கை செல்லுபடியாகாது

## லெப்டினன்ட் சண்முகம் தொடர்ந்த வழக்கில் நீதிபதி தீர்ப்பு

### 'நீதிபரிபாலனத்தையே அவமதிப்பதாகும்'

கொழும்பு, புதன்

**1960-ம் ஆண்டில் கடற்படை அதிகாரிகளில் சிலர் வெளிநாடு சென்றிருந்த சமயம் நடைபெற்ற சம்பவங்கள் பற்றி விசாரணை செய்த கே. டி. டி' சில்வா கமிஷனின் அறிக்கை செல்லுபடியாகாதென கொழும்பு மாவட்ட நீதிபதி திரு. என். சிவஞானசுந்தரம் இன்று தீர்ப்பளித்தார்.**

கடற்படை விசாரணைக் கமிஷனில் அறிக்கை செல்லுபடியாகாதெனக்கோரி அதில் சம்பந்தப்பட்ட பல அதிகாரிகள் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். இந்த வரிசையில் முதல் லெப்டினன்டாகும் ஏ ஐ. சண்முகம் தொடர்ந்த வழக்கே முதலாவதாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

திரு. சண்முகம் அரசாங்கத்தின் சிவில் அட்டோர்னி ஜெனரல் மீது இவ்வழக்கைத் தொடர்ந்திருந்தார். இவ்வழக்கை விசாரித்த கொழும்பு மாவட்ட நீதிபதி திரு. என். சிவஞானசுந்தரம், கமிஷன் அறிக்கை செல்லுபடியாகாதெனவும் திரு. சண்முகத்துக்கு நஷ்டஈடாகவும் வழக்குச் செலவாகவும் ரூபா 22,859 ரூபா 33 சதம் செலுத்தவேண்டும் எனவும் தீர்ப்பளித்தார்.

நீதிபதி தமது தீர்ப்பின் போது பின்வருமாறு குறிப்பிட்டார்:-

"ஒரு விஷயம் நிகழ்ந்துவிட்டது என்று முடிவுசெய்து கொண்டபின் அக்கட்டளை அல்லது சந்தேகத்தின் கண்கொண்டோ, அல்லது துவேஷத்துடனேயோ விசாரணை செய்யும் கமிஷனர் எவரும் செயலாற்றக்கூடாது. தமது முடிவுக்கு சார்பான சாட்சியங்களை ஏற்றுக்கொண்டும் எதிரான சாட்சியங்களை நிராகரிப்பதும் தவறானதாகும். இந்த கமிஷன் அறிக்கை, விசாரணை நீதிபரிபாலனத்தின் அடிப்படை தத்துவத்தையே அவமதிப்பதாக உள்ளது. எனவே கமிஷனின் அறிக்கை செல்லுபடியாகாததாகும்".

## 276 கொரில்லாக்கள் கொல்லப்பட்டனர்

### தென்வியட்னாம் துருப்புகளுக்கு முதல் பெரும் வெற்றி

சைகோன், ஏப்ரல் 7

**தென்வியட்னாமில் சைகோனுக்குத் தென்மேற்கே கடந்த மூன்று தினங்களாக நடைபெற்ற சண்டையில் 276 கொரில்லாக்கள் கொல்லப்பட்டதாயும், 33 பேர் சிறைப் பிடிக்கப்பட்டதாயும் அறிவிக்கப்பட்டது. ஏராளமான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.**

இதுவரை நடைபெற்ற சண்டையில் தென்வியட்னாமுக்கு கிடைத்த மிகப் பெரும் வெற்றி இது என வர்ணிக்கப்படுகிறது. கேற்றிரவு தாக்குப்படியாகத்தில் நடத்தப்பட்ட தாக்குதலின் விளைவாக 125 கொரில்லாக்களை அரசாங்கத் துருப்புக்கள் கைது செய்தன. இவர்களில் சிலர் பயங்கரவாதிகளாம்.

இதற்கிடையில் வியட்னாம் பிரச்சினைபற்றி சீனப் பிரதமர் சூ-என்-லாய் தெரிவித்திருக்கும் கருத்துப்பற்றி அமெரிக்க ராஜாங்க இலாகா எதுவும் சொல்ல மறுத்துவிட்டது. (மேலும் விபரம் 8-ம் பக்கம்.)

## முன்னாள் உதவி மந்திரி

### ரூ. 1000 பிணையில் விடுதலை

கொழும்பு, புதன்

முன்னாள் உள்ளூராட்சி உதவி மந்திரியும், முன்னாள் பொரளை எம். பி.யுமான திருமதி விவியன் குணவர்த்தனவை கொழும்பு அடிஷனல் மாஜிஸ்டிரேட் இன்று 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார். தேர்தல் தினமான மார்ச் மாதம் 22-ம் திகதி மோட்டார் கார் ஒன்றை தெருவில் மறித்து, காருக்குச் சேதம் விளைவித்ததாகவும், வழிமறித்தும் செய்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டு முறைப்படி சேர்மீது தொடரப்பட்ட வழக்கு இன்று காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மூன்று எதிரிகளில் திருமதி விவியன் குணவர்த்தனவும் ஒருவர்.

பொரளையைச் சேர்ந்த சுப்பையா வாமதேவன் என்ற காரோட்டி மார்ச் மாதம் 22-ம் திகதி இரவு சிறுநீர் வெளிவிடுகையால் சென்று கொண்டிருக்கையில், ஒரு கார் தனது காரை

(6-ம்பக்கம் பார்க்க)

## திரு. ஜி. ஜி. விரைவில் லண்டன் செல்வார்

கொழும்பு, புதன்

**சதிவழக்கில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட பதினொரு பிரதிவாதிகளும் இத்தீர்ப்பை ஆட்சேபித்து பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்வதற்கான ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. முன்பு இலங்கையில் நீதியரசராகக் கடமையாற்றிய திரு. ஈ. எப். என். கிரேஷியனும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும் பிரிவிகவுன்சில் முன் தோன்றி அப்பீலில் வாதாடுவதற்கான ஒழுங்குகள் செய்யப்படுவதாகவும் தெரிகிறது. திரு. பொன்னம்பலம் விரைவில் லண்டன் செல்வாரென்றும் அறியப்படுகிறது.**

சதிவழக்கில் நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டதன் பின்னர் குற்றவாளிகளாகக் காணப்பட்ட பதினொரு பேரும் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இவர்கள் இங்கு தனித்தனியான அறைகளில் விடுவிக்கப்பட்டுள்ளனர். சாதாரண கைதிகள் மாதிரி அல்லாது இவர்களுக்கு சிறைச்சாலைப் பகுதியின் காற்சட்டை, ஷேர்ட் உடுக்கப்பட்டுள்ளது.

அருகருகே தனித்தனியான அறைகளில் விடப்பட்டுள்ள இவர்களுக்கு, வைத்திய பரிசோதனை நடைபெறும் என்றும் இதன் பின்னரே இவர்களுக்குரிய வேலை பற்றி குறிப்பிடப்படும் என்றும் அறியப்படுகிறது.

கல்வித் தராதரத்தைப் பொறுத்து இவர்களுக்கு வேலை வழங்கப்படுமாம்.

**சொத்துக்கள் விவகாரம்**

சதிவழக்கில் குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனை குறித்து முடிக்கிரிய சட்ட அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், பிரதிவாதிகள் பிரிவு கவுன்சிலுக்கு அப்பீல் செய்திருப்பதால் அப்பீல் தீர்ப்பு வெளியாகும்வரை இவர்களது சொத்துக்களை அபகரிப்பது நிறுத்தி வைக்கப்படும் என்று கூறினார்.

புதுவருடப் பிறப்பை முன்னிட்டு

8-4-65 — 12-4-65

மலிவு விற்பனை

நடைபெறும்.

கைத்தறிச் சேலைகள் 100, 120, 160 நம்பர் மற்றும் இலங்கா வேட்டி சால்வை சேலைகள் வோயில் வேட்டிகள்

மற்றும் எல்லா ஜவுளி வகைகளும் விலைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன.

தேவைக்கு முந்திக் கொள்ளுங்கள்

ஆ. அப்பையா அன் கோ.,

82, கே. கே. எஸ். ரோட், 54, பெரியகடை,

போன்: 506 யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தெய்வ பக்தர்களுக்குத் தொண்டு செய்யும் வாய்ப்பு, தவத்தில் குறைந்தவர்களுக்கு சுலபமாகக் கிட்டாது.

— ஸ்ரீமத்பாகவதம்

ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு பங்குனி மீ 26 உ (8-4-65)

## சதி வழக்குத் தீர்ப்பு

இலங்கையில் பரபரப்பை ஏற்படுத்தியதும் இரண்டு வருடங்களுக்கு மேலாக நடைபெற்றுவந்ததுமான புரட்சிச் சதிவழக்கு விசாரணை முடிவடைந்து நேற்று முன்தினம் தீர்ப்பும் வழங்கப்பட்டுவிட்டது. இத்தீர்ப்பை ஆட்சேபித்து அப்பீல் செய்யப்படவிருப்பதால் தீர்ப்பைப்பற்றி நாம் அபிப்பிராயம் எதுவும் கூறுவது முறையாகாது.

இலங்கையிலும் மற்றும் ஆசிய-ஆபிரிக்க நாடுகளிலும் ஜனநாயகம் இன்னும் சரியாக வளர்ச்சியடையவில்லை. உள்நாட்டிலும் உலகிலும் சமாதானமும் சுதந்திரமும் நிலைக்க வேண்டுமாயின் ஜனநாயக ஆட்சி அவசியம் என்பதை ஆசியநாடுகள் சிலவற்றில் பலாத்காரத்தின் மூலம் ஆட்சிபீடமேறியவர்களின் பாதுகாப்பற்ற நிலையையும் ஸ்திரமற்ற ஆட்சியையும் கண்டு உணர்ந்து கொள்ளலாம். ஜனநாயகம் நிலைபெறும்வரை கஷ்டங்கள் அனுபவிக்க வேண்டி நேரிடலாம். இக்கஷ்டங்களைக் கண்டு மனம் தளர்ந்து பலாத்காரப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றி கஷ்டங்களை நீக்கிவிடலாம் என எண்ணுவது பலாத்காரத்தை விரும்புபவர்களுக்கும் கேட்டுக்கும் தீங்காகவே முடியும். அதற்கு இவ்வழக்குத் தீர்ப்பும் தக்க எச்சரிக்கையாகும்.

ஜனநாயகம் இங்கு பூரண வளர்ச்சி பெறவும் சரியான முறையில் இயங்கவும் சகல கட்சித் தலைவர்களும் தங்கள் கட்சி நலனை விட நாட்டின் நலனை முக்கியமாகக் கொள்ள வேண்டும். இன்று இங்கு சில கட்சிகளையும் பல சமூகங்களையும் கொண்ட 'தேசிய அரசாங்கம்' ஆட்சிபீடத்திற்கு வந்துள்ள போதிலும் இன்னும் சிலகட்சிகளும் பார்லிமெண்டரி ஜனநாயகத்தில் அனுபவமும் திறமையும் உடையவர்களும் வெளியேயுள்ளனர். அவர்களையும் வெளியேயுள்ள கட்சிகளின் ஆதரவையும் இந்த அரசாங்கம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஜனநாயகத்தின் வளர்ச்சிக்குப் பலம் வாய்ந்த எதிர்க்கட்சி அவசியந்தான் என்றாலும் தேசியப் பிரச்சினைகள் பலவுள்ள இந்த நாட்டில் முக்கியத்துவம் வாய்ந்த அப்பிரச்சினைகளுக்கு ஸ்திரமான சமூகமான தீர்வு காண்பதற்கு சகலரது ஒத்துழைப்பும் ஆதரவும் அவசியம் தேவை. முக்கியமான தேசியப்பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு காணப்பட்டால்தான் தேசிய ஒருமைப்பாடும் ஜனநாயகமும் நிலைக்க முடியும். முக்கிய தேசியப் பிரச்சினைகள் தீராதவரை தேசிய ஒருமைப்பாடு ஏற்பட முடியாது. அதுவரை ஜனநாயகத்துக்கும் ஆபத்து இருந்து வரலாம். ஜனநாயக விரோதசக்திகளுக்கும் சந்தர்ப்பம் ஏற்பட ஏதுவாகும். இன்றைய அரசாங்கம் இதைக் கருத்திற் கொண்டு இதரகட்சிகளின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெற்று தேசிய பிரச்சினைகளுக்கு ஒரு ஸ்திரமான தீர்வு காண வேண்டும். இதன்மூலம் ஜனநாயகத்தையும் பாதுகாக்கலாம். நாட்டு மக்களின் கஷ்டங்களை உடனுக்குடன் உணர்ந்து அவற்றைத் தீர்க்க, மக்களின் எல்லாப் பிரதிநிதிகளின் ஆதரவையும் அரசாங்கக்கட்சி எவ்வளவுதூரம் பெறமுடிகிறதோ அவ்வளவுக்கு அதன் வெற்றியுமிருக்கும். அரசாங்க அதிகாரிகள் ஏதேச்சாதிகார மனப்பான்மையைக் காண்பது [illegible] தற்கும் இவ்வழக்குத் தீர்ப்பு நல்ல எச்சரிக்கையாகும்.

# ஆறுகிரக சேர்க்கையுடன் சூரிய கிரகணம்

## இன்னலை நீக்க முன்னேஸ்வரத்தில் நடைபெறும் மகாயாகம்

பா. சிவராமகிருஷ்ணசர்மா —

இலங்காபுரியில் சரித்திரப் பிரசித்திபெற்றதும், இதிகாச புராணங்களில் பிரசித்திபெற்றதுமான ஸ்ரீமுன்னேஸ்வர தேவாலயத்தில் மஹாமிருத்திஞ்ச யாகமும் (யாகம்) ஆறுகிரகச் சேர்க்கையுடன் சூரிய கிரகணம் 30-5-65ல் சம்பவிப்பதால் ஏற்படும் இன்னல்களிலிருந்து விமோசனமடையும்பொருட்டு 29-3-65 தொடக்கம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

மேல்நாட்டு-கீழ்நாட்டுச் சோதிட விற்பன்னர்களும், விஞ்ஞான சாஸ்திர வல்லுனர்களும், தீர்க்கதரிசிகளும் 30-5-65ல் ஆறு கிரகச் சேர்க்கையோடு பூரண சூரியகிரகணமும் நிகழ்வதுபற்றி உலகுக்கு அறிவித்துள்ளார்கள். அன்றைய தினத்தன்று இடப ராசியில் சூரியன், சந்திரன், புதன், சுக்கிரன், குரு, ராகு ஆகிய ஆறு கிரகங்களும் ஒன்றுசேருகின்றன. இதோடு பூரண சூரிய கிரகணமும் செவ்வாய் சிங்கத்திலும், சனி கும்பத்திலும், சமசப்தமத்திலும், பரஸ்பர திருஷ்டியிலும் அமைவன. இதனால் பற்பல தீமைகள் ஏற்படக்கூடுமென்றும், இவ்வாறு ஏற்படும் தீய விளைவுகளைச் சம்பூரணமாகத் தவிர்க்க முடியாவிடினும், அதனால் ஏற்படும் பல பலன்களைக் குறைப்பதற்காக உலகத்தில் உள்ளோரை எதிர்நோக்கிவரும் இன்னல் [illegible] எடுக்காத சூரியனைக் கண்ட பனிபோல் போகுமாறு செய்வதற்காக ஆத்மீகப் பெருமக்கள் பெருமுயற்சி எடுத்துவருகிறார்கள். அவ்வாறான முயற்சியில் முக்கியமானது ஸ்ரீமுன்னேஸ்வரத்தில் நடைபெறும் யாகம்.

### கிரியா விபரம்

காலை திருப்பள்ளியெழுச்சி பூஜையின் பின் மஹாயாகம் (ஹோமம்) செய்வதற்கென நியமிக்கப் பெற்றுள்ள பிரதான குரு அதிசிரத்தையுடன் சங்க பூஜை, பஞ்சவிம்சதி, கலச பூஜை போன்ற பூஜைகளை நடத்துவார். இவையெல்லாம் வல்ல இறைவனுக்குத் துதிக்கப்படும் முன்னோதப் பெருமானுக்கு சிவசக்தி ஐக்கியரூப ஸ்ரீமஹாமேரு யந்திரத்திற்கும் விசேட விசேஷமான அபிஷேகம் நடைபெறும். பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்தம், பால், தயிர், சுகந்த முராசங்கள், செவ்விளநீர், நெய், தேன், கருப்பஞ் சாறு போன்றவைகளினாலும் 108 கலச திருமஞ்சன நீர், சங்காபிஷேக நீர், நறுமணங்கமழும் வெண்சந்தனம், பன்னீர் போன்றவைகளினாலும் எல்லாம் திருவருளாளனை அபிஷேகஞ்செய்து அபிஷேகத்தீர்த்தத்தினை பக்தர்களுக்கு கொடுப்பார்கள்.

அபிஷேக ஆராதனையின் பின் விசேஷ காலைசந்தி பூஜை நடைபெற்று ஸ்ரீசக்கரம்மடு மஹா யந்திரத்தை மேள தாள, வாத்தியஇசை, மணி ஓசை போன்ற மங்கள இன்னிசைகளோடும், குருமாருடைய மந்திர உச்சாடனங்களோடும் (வேதகோஷம்) மூலஸ்தானத்திலிருந்து (கர்ப்பக் கிருகத்திலிருந்து) யாகத்திற்கென விசேஷமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மண்டபத்திற்கு எழுந்தருளச்செய்வார்கள். இந்த விசேஷ யாக மண்டபத்தில் ஒன்பது குருக்கள்மார் ஒருங்குகூடி மஹா மிருத்திஞ்ச யாகத்தைச் சிறப்புற நடத்துவார்கள். இந்த யாகத்தின்போது மகாகணபதி யாகம் நூற்றியெட்டும், மிருத்தியுஞ்ச மஹாயாகம் ஆயிரத்தியெட்டும், சாத்தியாயனி யாகம் நூற்றியெட்டும், ஒவ்வொரு நவக்கிரகயாகம் நூற்றியெட்டும் பயபக்தியுடன் நடைபெறும். காலையின் கடைசி அங்கமாக நவவர யாகம் ஆயிரத்தியெட்டும் நடைபெற்றபின் உச்சிக்காலை பூஜை நடைபெற்று அன்னதானம் நடைபெறும்.

மாலை 4-30 மணியளவில் சாயரட்சைப் பூஜை நடைபெற்றபின் யாகமண்டபத்தில் சிவகாமியம்பாள் சமேத நடராஜமூர்த்திக்குச் சிதம்பர சம்மேளன ஸ்ரீசக்ரயந்திர பூஜை நடைபெற்று இரண்டாங்காலமெனப்படும் விசேஷ பூஜை நடைபெறும். பூஜையின் போது நறுமணம் கமழும் தசாங்க தூபதீபம் அலங்கார தீபம், நட்சத்திர தீபம், பஞ்சமுக தீபம், சதுர்முக தீபம், வில்வ தீபம், நாக தீபம், விருஷப தீபம், புருஷ மிருக தீபம், கூர்ம தீபம், கும்ப தீபம், ஈசானாதி சத்தியோஜாத தீபங்கள், கற்பூர தீபம், பஞ்சாராத்திகை போன்ற தீபங்களிலும் கண்ணாடி, குடை, சாமரை, விசிறி, மயில்தோகை, ஆலவட்டம் போன்ற உபசாரப் பொருட்களாலும் ஆராதனை நடாத்தி லகிதா ருத்திரத்திரிசதி, வேத மந்திரமோதல், ஆசீர்வாதம், தேவாரம், திருப்புராணம் போன்றவற்றினாக கோஷிப்பார்கள். இதன்பின் காலையில் நடைபெற்றவாறேயாகம் நடைபெறும்.

மஹாகணபதி யாகம் 108
மிருத்தியுஞ்ச யாகம் 1008
சாத்தியாயனி யாகம் 108
நவக்கிரக யாகம் 108.

யாகபூஜையின் கடைசி அங்கமாக ஸ்ரீசக்ரமேரு மஹாயந்திரத்தை மேள தாள வாத்திய இசைகளோடு யாகமண்டபத்திலிருந்து எழுந்தருளச்செய்து மூலஸ்தானத்திற்குக் கொண்டு சென்று அர்த்தஜாமப் பூஜை நடைபெறுவதோடு அன்றைய தினப் பூஜைகள் முடிவுறும். இவ்வாறு அறுபத்துநான்கு தினங்கள் தொடர்ச்சியாக நடைபெறும் யாகம் 31-5-65ம் தினத்தன்று சிறப்பாக முடிவை எய்தும்.

# இலங்கை - இந்திய உறவு உலகுக்குநன்மை புரியவேண்டும்

## டட்லிக்கு பாரதியார் வாழ்த்து

புதுடில்லி, ஏப். 7

திரு. டட்லி சேனநாயக்கா இலங்கையின் பிரதமராகப் பதவியேற்றது குறித்து ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் டில்லியிலிருந்து அவருக்கு வாழ்த்துக் கடிதமொன்றை அனுப்பியிருக்கிறார். திரு. டட்லியின் ஆட்சிக்காலத்தில் இலங்கை இந்திய உறவு உலகுக்கு நன்மைபுரிய வேண்டுமென அவர் தனது செய்தியில் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

ஸ்ரீ பாரதியாரின் கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

காலசக்தி ஒரே வானத்தின் கீழ் ஒரே உலகில் ஒரே மனித சமுதாயமாக எல்லோரும் வாழும்காலத்தை நோக்கிமுன்னேறுகிறது. சத்தியம், சுதந்திரம், ஐக்கியம், தெய்வத்தன்மை கொண்ட புதிய சமயோக ஜீவனத்தை நோக்கி மனித வாழ்க்கை முன்னேறுகிறது. நாம் எல்லோரும் உள்ளம் ஒன்றி இனி மனிதசமுதாயத்தில் பிரிவு இன்றி அகில ஒருமையை நிலைநாட்டுவோம். இலங்கை உலகசமுதாயத்தின் மணிபதமாக விளங்கவேண்டும். தங்கள் நீண்ட ஆட்சியில் மனித சமுதாயத்தின் ஆர்வமெல்லாம் நிறைவேறட்டும்.

## குதிரைப் பந்தயம்

நுவரெலியா, புதன்

குதிரைப் பந்தயத்திற்காக இந்த மாதத்தில் இங்கு அநேகர் வந்திருக்கின்றனர். நுவரெலியா மேயர் சிறில் மெ. [illegible] இங்கு வருபவர்கள் எல்லாம் நல்லமுறையில் விடுமுறையைக் கழிப்பதற்காகச் சகல ஒழுங்குகளையும் செய்துள்ளார்.

மூன்று வருடங்களுக்குப் பின்னர் நடைபெறும் இக்குதிரைப் பந்தயத்தில் பல குதிரைப்பந்தயப் பிரியர்கள் பார்வையாளர்களாக இருப்பார்களெனத் தெரியவருகிறது.

பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா இங்கு இம்மாதம் [illegible] காக வரவிருக்கிறார்.

## ஸ்ரீராமநவமி கொண்டாட ஏற்பாடு

கண்டி, புதன்

திவ்யஜீவன சங்கத்தின் கண்டிக் கிளை ஸ்ரீராம நவமி தினத்தை ஏப்ரல் 11-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு சச்சிதானந்தபோவனத்தில் கொண்டாடவிருக்கிறது. விசேஷ சொற்பொழிவுகளும் பஜனையும் அன்றைய நிகழ்ச்சியில் இடம்பெறும்.

## ஜயாரன் எழுதுவது

டட்லி சேனநாயக்கா பிரதமரான செய்தியை டெல்லியில் இருக்கையில் சுவாமி சுத்தானந்த பாரதியார் கேள்விப்பட்டு, அங்கிருந்து அவருக்கு ஒரு 'வாழ்த்துக்கடிதம்' எழுதியிருப்பதாக ஓர் அன்பர் மூலம் அறிந்தேன்.

சென்றமுறை சுவாமி அவர்கள் கொழும்புக்கு வந்து பம்பலப்பிட்டி பிள்ளையார் கோவிலில் தங்கியிருக்கையில்தான் பழைய அரசாங்கம் வீழ்ச்சியடைந்தது. டட்லி, சி. பி. டி. சில்வா இவர்கள் அப்பிள்ளையார்கோவிலுக்கு வந்து வணங்கி, ஏராளமான சிதறு தேங்காய்களையும் அடித்து நன்றி தெரிவித்தனர்.

* * *

பிரதமர் டட்லிக்கு, சுவாமி 1952-ம் வருடமே அறிமுகமானவராம். அவ்வாண்டு டோக்கியோவில் நடந்த உலகசெனாத்த மகாநாட்டுக்குச் சென்று இங்கு திரும்பியபோது, கொழும்பில் சுவாமிக்கு பெரிய வரவேற்பளிக்கப்பட்டது. அச்சமயம் பிரதமராக இருந்த டட்லியே அக்கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

மறுநாள் டட்லியும் சுவாமியும் நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தனர். இந்தியாவில் புத்தசமயம் மறைந்துவிட்டவில்லை என்றும், மறுமலர்ச்சியடைந்துள்ளதாகவும் சுவாமி டட்லிக்கு விளக்கினார். இருவரும் டட்லியின் வீட்டிலே பூஜையறையில் புத்தர் பிரானை ஒருவணக்கம் தெரிவித்தனர்.

ஸ்ரீ டட்லி மீண்டும் இலங்கையின் பிரதமராக வேண்டுமென்று அவர் கொழும்பில் இருநாட்கள் தியானித்தாராம். தமது பிரார்த்தனை நிறைவேறியதுபற்றி தமக்கு மிக மகிழ்ச்சியென்றும் இலங்கையும், இந்தியாவும் ஒன்றுகூடி உலகத்துக்கு நலம்புரிய வேண்டுமென்றும், டட்லி பிரதமரானதால் இலங்கைத் தமிழர் உள்ளம் புதிய நம்பிக்கை கொண்டு விம்மிதம் அடைவதாயும், அக்கடிதத்தில் சுவாமி அவர்கள் குறிப்பிட்டுள்ளதாக அறிகிறேன். "சுவாமியின் அருள் உள்ளத்திலிருந்து உதிக்கும் எண்ணங்கள் வீண் போகமுடியா."

* * *

இலங்கை வானொலியில் தேர்தல் முடிவுகள் வெளியாகி வந்ததல்லவா! ஐ. தே. கட்சிக்கு அதிக ஸ்தானங்கள் கிடைத்துவந்ததைக் கேட்ட ஒரு தமிழ் அன்பர் முதலில் கிழ்ச்சி அடைந்தாராம். ஆனால் பின்னர் அவருக்குப் பெரிய கவலை வந்துவிட்டதாகத் தெரிவித்தார். என்ன கவலை தெரியுமா? அக்கட்சி 80க்கு மேற்பட்ட ஸ்தானங்கள் பெற்று பெரும்பான்மைப்பலம் தனிப்பட கிடைத்துவிடக் கூடாதென்பதே அக்கவலையாம். ஏன் தெரியுமா? யு. என். பிக்கு அப்படியான அதிக பலம் கிடைப்பதாயின் அவர்கள் தமிழ்ப் பிரதிநிதிகளை லட்சியம் செய்வார்களா? திரும்பியும் பார்ப்பார்களா?

மீண்டும் சென்றமுறை ஸ்ரீ லங்கா கட்சியினர் காட்டிய மனப்பான்மையையே ஐ. தே. கட்சினரும் செய்யலாமென்றும் தமிழரின் கோரிக்கைக்கு அவர்கள் செவி சாய்க்கமாட்டாரென்றும் அஞ்சினாராம். ஐ. தே. கட்சிக்கு 66 ஸ்தானங்களுடன் நின்று விட்டது அவருக்கு மிக மகிழ்ச்சி, கைகொடுத்துக் கும்பிட்டார் கடவுளை. ஐ. தே. கட்சிக்கு இத்தேர்தலில் 80 ஸ்தானங்கள் கிடைத்திருப்பின் தமிழ்ப் பிரதிநிதிகளை அவர்கள் லட்சியம் செய்திருப்பாரா? அவர்களுடன் பேச்சுகள் நடத்தி இருப்பரா? திருவருள் செயல் எவ்வளவு விந்தையானது! தெய்வத்தை

4-ம் கலம் பார்க்க.

(5-ம் கலத் தொடர்ச்சி)

நம்பி வாழ்பவர்களுக்கு உய்வில்லாமல் போகுமா?

* * *

வானுற்ற மாமலைகளானாய் நீயே
வடகயிலை மன்னியிருந்தாய் நீயே,
ஊனுற்ற வொளி மழுவாட்படையாய் நீயே
ஒளிமதியோ டரவுபுனல் வைத்தாய் நீயே,
ஆனுற்ற ஐந்தும் அமர்ந்தாய் நீயே
அடியானென் றடியென் மேல்வைத்தாய் நீயே,
தேனுற்ற சொல் மடவாள் பங்கன் நீயே
திருவையாறகலாத செம்பொற்சோதீ.

—அப்பர் சுவாமிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வியட்னும் பிரச்னையை தீர்க்க நேரடி கட்சிகளே முயலவேண்டும் சீனுவுக்கு இதில் சம்பந்தமில்லை"

## யுதாண்டுக்கு திரு. சூ கடிதம்

### வடவியட்னுமுக்கும் சம்பந்தமில்லை என்கிருர்

நியுயோர்க், ஏப்ரல் 7

வியட்னும் பிரச்னையை அங்கு நேரடியாகத் தலையிட்டுவரும் கட்சிகள் மட்டுமே தீர்க்க வேண்டுமென சீனப்பிரதமர் திரு. சூ-என்-லாய் ஐ. நா. பொதுக் காரியதரிசி யுதாண்டுக்குத் தெரிவித்திருக்கிருர்.

சீனப்பிரதமரின் இந்தக் கருத்து அல்ஜீரிய அதிபர் பென்பெல்லாவுக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வியட்காங்கியர், அமெரிக்கா அல்லது தென் வியட்னும் ஆகிய நாடுகளே இவ்விஷயத்தில் நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ள கட்சிகள் என்றும் தமது அரசாங்கத்துக்கு வியட்னும் பிரச்னையில் சம்பந்தம் இல்லையென்றும் சூ கூறியிருக்கிருராம். வடவியட்னுமும் இதில் சம்பந்தப்படவில்லை என அவர் கூறியிருக்கிருர்.

**ஜப்பான் மத்தியஸ்தம்**

வியட்னும் விஷயத்தில் ஜப்பான் மத்தியஸ்தம் செய்ய முடியும் என ஜப்பானிய பிரதமமந்திரி கூறியிருக்கிருர்.

லண்டனில் கூடிய உலக வின்ஞானிகள் சம்மேளனம் வியட்னும் பிரச்னைக்கு ராணுவத் தீர்வு காண முயல்வது அழிவுக்கு வழி வகுக்கும் எனக் கூறியிருக்கிறது.

இதற்கிடையில் சைகோனிலிருந்து 130 மைல் தூரத்தில் நடைபெற்ற சண்டையில் 120க்கு மேலான வியட்காங்கியர் கொல்லப்பட்டதாயும், 6 அமெரிக்கர் உட்பட 14 தென் வியட்னுமியர் கொல்லப்பட்டதாயும் அறிவிக்கப்படுகிறது.

**31 விமானங்கள் சேதம்**

அமெரிக்கப் பாதுகாப்பு இலாகா விடுத்திருக்கும் ஒரு அறிக்கையில் சென்ற சில மாதங்களில் அமெரிக்கா வியட்னும் மீது நடத்திய விமானத் தாக்குதலில் மொத்தம் 31 போர் விமானங்களை இழந்ததாகக் கூறியது. 164 அமெரிக்க விமானங்கள் அழிக்கப்பட்டதாக வடவியட்னும் கூறியிருப்பதற்கு பதிலளிக்கும் வகையில் இந்த அறிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

## நியூஸிலாந்து 5 விக்: 444 ரன்கள்

லாகூர், ஏப் 7

பாகிஸ்தானுக்கும், நியூஸிலந்துக்குமிடையேயான 3-வது கிரிக்கெட் டெஸ்டில் நியூஸிலந்து தன் முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட் நஷ்டத்திற்கு 444 ரன்கள் எடுத்தது அதற்கு முன் விளையாடிய பாகிஸ்தான் தன் முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தை 7 விக்கெட் நஷ்டத்திற்கு 357 ரன்களுடன் முடித்துக்கொண்டது.

## சீனு மீது கண்டனம்

புதுடில்லி, ஏப். 7

இங்கு கூடிய சர்வதேச சுதந்திர தொழிற்சங்க சம்மேளனம் இந்தியா மீது சீனு நடத்திய தாக்குதல், சீனுவின் அணு சோதனை, இந்தோனேஷியாவின் மலேசிய எதிர்ப்புக் கொள்கை ஆகியவற்றைக் கண்டித்திருக்கிறது.

—

## காஞ்சிபீடாதிபதி வேண்டுகோள்

சென்னை, ஏப். 7

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகள் விடுத்துள்ள ஒரு வேண்டுகோளில் தெய்வீக சித்தபுருஷர்களின் பக்திப் பாடல்களை எதிர்காலத் தலைமுறையினருக்குப் போதிப்பது கடமை எனக் கூறியிருக்கிருர்.

மேலும் அவர் கூறியதாவது:

"அவசியமானபோது நமக்கு மனச்சாந்தியை அளிக்கவல்ல ஆத்மீகப் பயிற்சியை நமக்கு நமது முன்னேர்கள் அளிக்கவில்லை என தற்போதைய தலைமுறையினரைச் சேர்ந்தவர் நினைக்கிருர்கள் இந்தக் குறைபாட்டின் விளைவாக வெவ்வேறு மதங்களுக்கு, குறிப்பாக ஹிந்து மதத்திலிருந்து மாற்றங்கள் நடந்திருக்கின்றன.

எனவே நமது முன்னேர்கள் வகுத்த தொலைநோக்குப் பண்பு வாய்ந்த ஆத்மீக மரபுக்கு தக்கபடி சில பிரார்த்தனைகளிலிருந்து ஈடுபடவிருக்கும் இளம் தலைமுறையைச் சேர்ந்தவர்களுக்கு நாம் பக்திப் பாடல்களைக் காட்டுவது அவசியமாகும். தவிர பல்வேறு காரணங்களால் வேறு மதங்களுக்கு மாறியிருக்கும் பாரத புதல்வர்களை மீண்டும் அவர்களது முன்னேர்களின் ஆத்மீகக் கட்டுப்பாட்டுக்குள் வர விரும்பினுல், அவர்களுக்கு நாம் உதவவேண்டும்."

—

## சிறையும் அபராதமும்

பம்பலப்பிட்டி, புதன்

கொட்டாவைச் சேர்ந்த ஆறன் பொதுதேயு என்பவர் அதிகவிலைக்கு பாண் விற்றதாகக் குற்றஞ்சாட்டி கொழும்பு வடக்கு மாஜிஸ்திரேட் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு ரூபா 150 அபராதமும் ஒரு நாள் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டார்.

## அரபிய மன்னரின் விருந்தினர் ஷேக்அப்துல்லா

### உலக முஸ்லிம்கள் மகாநாட்டில் சொற்பொழிவாற்ற அழைப்பு

மக்கா, ஏப்ரல் 4

அடுத்தவாரம் மக்காவில் ஆரம்பமாகும் உலக முஸ்லிம்கள் மகாநாட்டில் சொற்பொழிவாற்றுமாறு ஷேக் அப்துல்லா அழைக்கப்பட்டிருக்கிருர். இந்த மகாநாட்டில் உலகம் முழுவதிலுமுள்ள முஸ்லிம் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள். சவூதி அரபிய மன்னர் பைசால் மகாநாட்டைத் திறந்து வைப்பார். ஷேக் அப்துல்லா, மன்னர் பைசாலின் சொந்த விருந்தினராம் மூன்று நாள் தங்குவார்.

வெளிநாடுகளில் ஷேக் அப்துல்லாவின் செயல்களும், அவர் விடுத்திருக்கும் அறிக்கைகளும் தேசவிரோதமானது என காஷ்மீர் பிரதமர் திரு. சாதிக் கூறினுர்.

இந்திய அரசாங்கம் பரந்த மனப்பான்மையுடன் அவருக்கு வெளிநாடு செல்ல பாஸ்போர்ட் வழங்கியது என்றும் ஆனால் அவர் நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டதாயும் சாதிக் கூறினுர்.

"இந்தியாமீது சீனு ஆக்கிரமிப்பு நடத்தியிருப்பது தெரிந்தும்கூட, திரு சூ-என் லாயை அவர் சந்தித்திருக்கிருர் இந்தியாமீது சீனு நடத்திய ஆக்கிரமிப்பைக் கண்டித்து திரு. ஷேக் அப்துல்லா நேருவுக்குக் கடிதம் எழுதியிருக்கிருர் ஆனல் அதற்கு மாருக இப்போது சீனப்பிரதமரை அவர் சந்தித்திருக்கிருர்" என்றும் திரு. சாதிக் தெரிவித்தார். இந்தியா அவரது பாஸ்போர்ட்டை ரத்துச் செய்ததைத் தாம் ஆதரிப்பதாயும் காஷ்மீர் பிரதமர் தெரிவித்தார்.

## மே. பெர்லின் போக்குவரத்தில் தலையிடாதீர்

### ரஷ்யாவுக்கு மேற்கு நாடுகள் வன்மையான கண்டனம்

வாஷிங்டன், ஏப் 7

மேற்கு பெர்லினுக்கு ரயில், விமானப் போக்குவரத்துக்களை கிழக்கு ஜெர்மனி தடை செய்தது குறித்து மேற்கு நாடுகள் ரஷ்யாவுக்கு வன்மையான ஆட்சேபனையைத் தெரிவித்திருக்கின்றன.

இந்தத் தலையீட்டை உடன் நிறுத்துமாறும் மேற்கு நாடுகளின் அங்கீகரிக்கப்பட்ட போக்குவரத்து உரிமையை இது மீறும் செயல் என்றும் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் ரஷ்யாவுக்குத் தெரிவித்திருக்கின்றன.

இதனுல் ஏற்படும் விளைவுகளுக்கு ரஷ்யாவே பொறுப்பு என்றும் அவைகள் தெரிவித்துள்ளன.

நேற்று 3-வது நாளாக மேற்கு ஜெர்மனிக்கும், மேற்கு பெர்லினுக்கு மிடையேயான ரயில் போக்குவரத்தை கிழக்கு ஜெர்மனி 4 மணி நேரம் தடை செய்தது.

பொன்நகரிலிருந்து மேற்கு பெர்லினுக்கு மேற்கு ஜெர்மன் பிரதமர் ஏர்...

## "ஆட்சி மொழிச் சட்ட திருத்தத்தை ஏற்கமுடியாது"

### ஜனசங்கம் எதிர்ப்பு

ஜெய்பூர், ஏப் 7

மத்தியிலும், ராஜயங்களிலும் ஆங்கிலத்துக்குப் பதில் இந்திய மொழிகள் இடம் பெற வேண்டும் என்ற நோக்கத்துக்குப் பாதகமாக ஆட்சிமொழிச் சட்டத்துக்கு திருத்தம் எதையும் ஏற்கமுடியாது என பாரதீய ஜனசங்க காரியக் கமிட்டி கூறியிருக்கிறது.

ராஜயங்களில் உடனடியாக ஆங்கிலத்துக்குப் பதில் பிராந்திய மொழிகள் நிர்வாக அலுவல்களைத்துக்கும் பயன்படுத்தப்படவேண்டும் என்று கமிட்டி தீர்மானம் ஒன்றில் கூறியது.

ராஜயங்களில் இனி ஆங்கிலம் நீடிப்பதற்கு எவ்வித நியாயமும் இல்லை என்றும், மக்கள் அதனை அனுமதிக்கலாகாது என்றும் தீர்மானம் குறிப்பிட்டது.

ஹிந்தி தெரியாத ஊழியர்கள், சுதந்திரத்திற்குப் பின் 17 ஆண்டுகளாக ஹிந்தியில் அலுவலாற்ற தங்களைப் பயன்படுத்திக்கொள்ளாத ஊழியர்கள் ஆகியோருக்கு மத்தியில் 10 ஆண்டுகளுக்கு ஆங்கிலத்தின் உபயோகம் நீடிக்கவேண்டும் என்று தீர்மானம் மேலும் கூறியது.

யூனியன் பப்ளிக் சர்விஸ கமிஷன் பரீட்சைகளை இந்திய மொழிகளைத்திலும் எழுத அனுமதிக்கப்படவேண்டும். ஹிந்தி பேசுவோருக்கும் மற்றோர் இந்திய மொழியில் கட்டாய பரீட்சை இருக்கவேண்டும். இந்திய மொழிகளைத்தும் தேசிய மொழிகள். அவை சம அந்தஸ்து உடையவை. அவற்றின் வளர்ச்சிக்கு வகைசெய்வது அரசாங்கத்தின் பொறுப்பு" என்றும் தீர்மானம் கூறுகிறது.

## தனுஷ்கோடிக்கு புதுரஸ்தா விரைவில் அமைக்கப்படும்

சென்னை, ஏப். 7

ராமேஸ்வரத்திலிருந்து தனுஷ்கோடியின் புனிதஸ்நானம் கட்டம்வரை விரைவில் ரஸ்தா அமைக்கப்படும் என்றும், 12 மைல் நீளமான இந்த ரஸ்தா அமைக்க ரூ 12 லட்சம் செலவாகுமென்றும் அறிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கான விபரங்கள் வகுக்கப்பட்டு வருவதாயும், நிதி உதவிக்கு விரைவில் மத்திய அரசாங்கத்திடம் அனுப்பப்படும் என்றும் நெடுஞ்சாலை பிரிவைச் சேர்ந்த ஒரு அதிகாரி அறிவித்தார்.

கடல் நீர் தற்போது வடிந்துவிட்டதாயும், யாத்திரிகர்கள் புனித ஸ்நான கட்டத்திற்குச் செல்ல முடியுமென்றும் அவர் கூறினுர்.

பாம்பன் ரயில்பாலத்தை யொட்டி 246 அடி அகலத்திற்கு ரூ 8 கோடி செலவில் ஒரு ரஸ்தா பாலத்தை நிறுவுவதற்கான விபரங்களையும், மதிப்பீடுகளையும் தயாரித்து வருவதாயும் அவர் கூறினுர்.

திருநெல்வேலி ஜங்ஷனையும் பாளையங்கோட்டையையும் இணைக்கும் தாம்பரபரணிப் பாலம் 48 அடி அகலத்திற்கு விஸ்தரிக்கப்படும் என்றும் அவர் கூறினுர்.

## "வியட்னுமில் தலையிட்டால் சீனுவுக்குள்புகுந்து தாக்குவோம்"

### அமெரிக்க அதிகாரி எச்சரிக்கை

வாஷிங்டன், ஏப் 7

கம்யூனிஸ்ட் சீனு வியட்னும் போரில் இறங்கினுல் கொரியா போரைப்போல் அல்லாமல் சீனுவிலேயே புகுந்து நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனதிபதி ஜோன்ஸனின் விசேஷ உதவியாளர் திரு. ஜார்ஜ் பண்டி தெலிவிஷன் பேட்டி ஒன்றில் எச்சரிக்கை விடுத்தார்.

"கொரியாவில் நடந்த ஐ நா. தலைமையில் ஒத்துழைத்துக் கொண்டிருந்த 16 நாடுகள் 1953 ஜூலையில் ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்தின. கொரியாவில் மீண்டும் ஆக்கிரமிப்புப்போர் ஏற்படின் பாதுகாப்பு விதிகள் அமுலாகமாட்டாதென்றும், எந்த இடத்தில் வேண்டுமானுலும் புகுந்து போர் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்றும் அவை அறிவித்தன" என்றும் அவர் கூறினுர்.

'வியட்னுமில் கண்ணியமான சமாதானத்திற்கு அமெரிக்கா தயாராக இருப்பதாயும், எனினும் அங்கு போர் நீடிக்கும் என்று தாம் கருதுவதாயும் திரு. பண்டி கூறினுர்.

## இந்தியாவுக்கு ரஷ்ய டாங்கிகள்

புதுடில்லி, ஏப் 7

இந்தியாவுக்கு சப்ளை செய்ய ரஷ்யா ஒப்புக்கொண்ட முதல் டாங்கிகள் இந்தமாத பிற்பகுதியில் வரும் எனத்தெரிகிறது எஞ்சியவை இவ்வருடத்துக்குள் வரும்.

மூன்று அணி மிக் 21 சூப்பர்ஸானிக் வேட்டை விமானங்களையும், லேசான டாங்கிகளையும் வழங்க ரஷ்யா இசைந்திருக்கிறது.

## இன்று கருணுநிதி வழக்கு

சென்னை, ஏப். 7

முரசொலி ஆசிரியர் திரு. எம். கருணுநிதி அந்த பத்திரிகைச் சேர்ந்த திரு. மாறன் ஆகிய இருவர் மீதுள்ள வழக்கு விசாரணை நாளை ஒத்திவைக்கப்பட்டதும் கருணுநிதி பாளையங்கோட்டையிலிருந்து சென்னைக்கு கொண்டுவரப்பட்டிருக்கிருர். வழக்கு விசாரணை முடியும் வரை சென்னை மத்தியசிறையில் அவர் வைக்கப்பட்டிருப்பார்.

—

## நாகா பேச்சு மீண்டும் ஒத்திவைப்பு

கொஹிமா, ஏப், 7

நாகா அமைதிப் பேச்சுகள் இரண்டு தினங்களுக்குப் பின்பு வருகிற 28, 29ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. இத்தகவலை இந்திய கோஷ்டித் தலைவர் திரு ஓ. பி. கண்டேவியாவும் அங்காமி முதல்வர் சாலிஹாவும் தெரிவித்தார்கள்.

நேற்று 4 மணிநேரம் இப்பேச்சுகள் நடைபெற்றன.

ஹாட் எவ்விதமான கம்யூனி... குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்துள்ள பிரபல தமிழ்த் திரையுலகப் பின்னணிப் பாடகர் டி. எம். சௌந்தரராஜன் சில தினங்களுக்கு முன் யாழ்ப்பாணம் திறந்தவெளியரங்கில் இசைவிருந்தளித்தார். இந்நிகழ்ச்சிக்குத் தலைமைவகித்த தமிழ்க் காங்கிரஸ் தலைவரும், யாழ்ப்பாணம் எம். பி.யுமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்துடன் சௌந்தரராஜன் குழுவினர் நிற்பதைப் படத்திற் காணலாம்.

# "மனித குலத்தின் ஒற்றுமைப்பாடு முக்கியம்"

## பஹாய் இயக்க கூட்டத்தில் பேச்சு

உடுப்பிட்டி, புதன்

"கடவுள் நம் எல்லோரையும் நேசிக்கின்றார் நமக்கு வழிகாட்டவும் நல்ல அறிவைக் கொடுக்கவும் அவருடைய அவதாரங்களை நமக்கு அனுப்பியுள்ளார் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு பெயர்களோடு மனிதருக்கு வந்துள்ள அவதார புருஷர்கள் மூலம் கடவுள் மனிதனை புரிந்துகொள்கிறான். இவ்வித அவதாரங்கள் நமக்கு எப்போதும் நன்மையையே தருவனவாயினும் அவர்களுக்கு வெவ்வேறு பெயர் உண்டு. ஹிந்தியில் சூரியனை சூர்யா என்றும் தமிழில் சூரியன் என்றும், அரபியில் 'ஷம்ஸ' என்றும் உருதுவில் 'ஆப்டாப' என்றும் வழங்கப்படுகிறது. ஒரே பொருளுக்கு இவை பலவிதப்பெயர்கள். அதுபோன்று சூரியன் ஒவ்வொரு பருவத்திலும் வேவ்வேறு இடங்களிலிருந்து உதித்தபொதிலும் அது எப்போதும் பிரகாசமுள்ள ஒரே சூரியன் தான்."

இவ்வாறு இலங்கை பஹாய் இயக்க தேசிய உண்மைச் சபையின் செயலாளர் திரு நீதன பாலோ வதிரி புலவராவோடையில் நடைபெற்ற பஹாய் இயக்க கூட்டத்திற் பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

சமாதானத்தைக் கட்டிவளர்ப்பதுதான் மிகவும் கஷ்டமான காரியம். மனிதகுலத்தின் ஒருமைப்பாடு மிகவும் முக்கியமானது; உண்மை எப்பொழுதும் ஒன்று தான். பக்ஷபாதமின்றி கட்டுப்பாடின்றி இருக்கும் உண்மையை ஒவ்வொருவரும் சுதந்திரமாக உணரவேண்டும். எல்லா மதங்களுக்கும் அடிப்படை ஒன்றுதான். மனிதன் மறந்திருக்கும் அந்த அடிப்படையை உறுதிசெய்யத்தான் இக்காலத்தில் பஹாவுல்லா மீண்டும் தோன்றியுள்ளார்."

இக் கூட்டத்திற்கு இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர் திரு எஸ். கந்தசாமி தலைமைவகித்தார். திரு. தர்மலிங்கம் நன்றி கூறினார்.

## வருடாந்த அணிவகுப்பு

யாழ்ப்பாணம், புதன்

சென்ற வாரம் யாழ். பழைய பூங்காவில் 500க்கும் அதிகமான 'பெண் வழிகாட்டிகளும்' 300 சிறுவர்களும் அவர்களின் வருடாந்த அணிவகுப்பில் கலந்துகொண்டனர். புலவிவாரணத்திற்காக இவர்கள் விற்பனை ஒன்றை ஒழுங்குசெய்திருந்தார்கள்.

இவ்வைபவத்தில் அநேக பெற்றோர்களும் நண்பர்களும் பங்குபற்றினர். வடபகுதி உதவி கல்வி அதிகாரி திரு எஸ். தணிகாசலம் அணிவகுப்பின்போது வணக்கசைகையை ஏற்றுக்கொண்டார், சிறந்த சேவை செய்தற்கான சின்னம் திரு, ஆர். இ. இராசநாயகத்திற்கு வழங்கப்பட்டது,

## கம்யூ. வாலிபர் சங்கக் கூட்டம்

உடுப்பிட்டி, புதன்

வதிரி கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கக் கூட்டம் வதிரி பூமகள் வாசத்தில் திரு. ஆர். இராஜ் தலைமையில் நடைபெற்றது. இன்றைய அரசியல் நிலைபற்றித் திருவாளர்கள் அட்வகேட் எஸ். ஜெயசிங்கம், ஆர். இராஜ் ஆகியோர் பேசினர்.

புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்-திரு. அ. துரைச்சாமி, உபதலைவர்-திரு. வ. பரஞ்சோதி, இணைச் செயலாளர்கள்- திரு மு.கமலாகரன், திரு வே சடகோபன், பொருளாளர்- திரு. ஆர். சதாசிவம், நிர்வாகசபை உறுப்பினர்களாகத் திருவாளர்கள்- ஆர். இராஜ், மு. மயில்வாகனம், கே. தம்பித்துரை. கே. தனபாலசிங்கம், கே. ஆனந்தராசா, ஏ. தர்மனுதன், எம். தர்மராசா ஆகியோர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

## முதல்வருடன் நெடுஞ்செழியன் பேட்டி

சென்னை, ஏப், 7

அசெம்பிளி எதிர்க்கட்சித் தலைவர் திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் முதன்மந்திரி திரு பக்தவத்சலத்தைச் சந்தித்து, ஹிந்தி எதிர்ப்பு கிளர்ச்சி சம்பந்தமாக பாதுகாப்புசட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களை விடுதலைசெய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

## 'உண்மையான நிம்மதி'

பண்டாரவளை, புதன்

"பாராளுமன்றத் தேர்தல் முடிவடைந்ததைத் தொடர்ந்து நாட்டில் நிலவிவந்த குழப்பநிலை முடிவடைந்துவிட்டது நாமெல்லோரும் இப்போது உண்மையில் நிம்மதியாக இருக்கிறோம். ஜனநாயக சக்திகள் கம்யூனிஸத்தையும் அடக்குமுறையையும் வெற்றிகொண்டுள்ளது.'

இவ்வாறு பண்டாரவளை சென் தோமஸ் ஆரம்ப பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்புவிழாவின்போது மேற்படி பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. எம். எல் ரத்னயக்கா பாடசாலை அறிக்கையைச் சமர்ப்பிக்கையில் தெரிவித்தார்.

நல்லதிற்கும் தீயதற்குமிடையில் சரியானதைத் தேர்ந்தெடுப்பது கல்வியின் ஒரு நோக்கமென்றும் நல்ல தீர்ப்பு வழங்கப் படவேண்டுமென்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## கல்வி மந்திரியை பண்டிதர் சந்திப்பர்

பருத்தித்துறை, புதன்

கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லையை இம்மாத இறுதி வாரத்தில் அகில இலங்கைப் பண்டிதர் சங்கம் பேட்டிகாணவிருப்பதாக சங்கச் செயலாளர் பண்டிதர் திரு குகவீரவனார் தெரிவித்துள்ளார்.

உடுப்பிட்டித்தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு மு. சிவசிதம்பரம் தலைமையில் செல்லவிருக்கும் இப்பேட்டிக் குழுவினர் வேலையற்றிருக்கும் பண்டிதர், புலவர்மார்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும்படி கோருவதுடன் பண்டிதர்களுக்கும் பட்டதாரிகளின் சம்பளம் கிடைக்க வழிசெய்யவேண்டுமெனவும் கோருவதுடன் பண்டிதர்களின் வேறு பல பிரச்சினைகள் பற்றியும் எடுத்துக்கூற விருப்பதாயும் தெரிவித்தார்.

இப்பேட்டிக் குழுவில் பொதுச்செயலாளர் உட்பட ஐவர் அங்கம் வகிப்பார்களென அறியப்படுகிறது.

## தாக்கப்பட்டனர்!

சமிபுரம், புதன்

சாந்தை-இளுசங் கண்டியைச்சேர்ந்த ஒரு கோஷ்டியினர் பொன்னாலைக் கடலில் மீன்பிடிப்பதற்காக நேற்று மாலை செல்லும்போது இனம் தெரியாத ஒரு கோஷ்டியினர் மூளாய் பிள்ளையார் கோவிலடியில் வைத்து ஆயுதங்களால் தாக்கியதால் ஒருவர் மண்டையில் பலத்த காயத்துக்குள்ளானார் தேர்தல் காலத்தில் நடைபெற்ற சம்பவத்தின் எதிரொலிதான் இதுவெனக் கூறப்படுகின்றது, காயமடைந்தவர் உடனடியாகச் சங்கானை பொலிஸ்நிலையத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டு பின்னர் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டார். சங்கானைப்பொலிசார் விசாரணை செய்கின்றனர்.

## புதிய பள்ளிக்கூட கட்டடங்களுக்கு தடை

பம்பலப்பிட்டி, புதன்

பள்ளிக்கூடக் கட்டடங்கள் கல்வி இலாகா கட்டுவது பற்றிய விஷயங்கள் அனைத்தும் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும் என்று கல்விமந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை உத்தரவு பிறப்பித்துள்ளார்.

முந்திய அரசாங்கம் தாறுமாறாக பள்ளிக்கூடக் கட்டடங்களைக் கட்டுவதற்காக பணத்தை ஒதுக்கியிருந்ததென்றும் கடந்த மூன்றுமாதத்திற்குள் பள்ளிக்கூடங்கள் போதியளவு இருக்க இடத்திலேயே கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை [illegible] கல்விமந்திரி கருத்துத் தெரிவித்துள்ளார்.

# "வெட்டுக் காயங்களுடன் இரத்தவெள்ளத்தில் கிடந்தார்"

## கிளிநொச்சி கொலை வழக்கில் பொலிஸ் சார்ஜண்ட் சாட்சியம்

சாவகச்சேரி, புதன்

"இந்த வருடம் மாசிமாதம் 22ம் திகதி காலை நான் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் இருந்தேன். அப்பொழுது சின்னத்தம்பி என்பவர் அங்கு வந்து கிளிநொச்சி 'சேவயர் காம்ப்' அருகில் ஒரு கொலை நடந்துவிட்டதாகத் தகவல் தந்தார் அதைத் தொடர்ந்து நானும் பொலிஸ்காண்ஸ்டபிள் தம்பசேனவும் சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்றோம் அங்கு 'சேவயர் காம்ப்' அருகில் இருந்த மரத்தினடியில் எதிரி நின்றார் அவர் தனது கையைத் துணியால் துடைத்துக்கொண்டிருந்தார். மரத்தடியில் கிடந்த ஒரு கத்தியை எனக்குக் காட்டினார். பின்னர் கூப்பிய கரங்களுடன் என்னிடம் வந்து சரண் அடைந்தார்" என்று கிளிநொச்சி கொலைவழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட்கோர்ட்டில் நீதிபதி திரு ஹேபர்ட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபொழுது சாட்சியமளித்த பொலிஸ் சார்ஜண்ட் சின்னையா கூறினர்.

இவ்வழக்கில் கிளிநொச்சியில் கே. பாலசுப்பிரமணியம் என்பவர் தனது மனைவி சரஸ்வதியைக் கத்தியால் குத்தி கொலைசெய்ததாக கிளிநொச்சி பொலிசாரால் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

சார்ஜன்ட் சின்னையா தொடர்ந்து சாட்சியமளித்தபொழுது கூறியதாவது:

"எதிரி அணிந்திருந்த பெனியனிலும் சாரத்திலும் இரத்தக் கறை படிந்திருந்தது. அவரது வலதுகையில் இரத்தக்காயமும் உருக்கக்காணப்பட்டது. நான் அவர் காட்டிய கத்தியைப் பொறுப்பேற்றுக்கொண்டேன். அதிலும் இரத்தம் காணப்பட்டது அந்த மரத்திற்கும் "சேவயர்காம்பிற்கும இடையில் கொலையுண்ட சரஸ்வதி முகம் குப்புற விழுந்து கிடந்தார். அவர் நீலநிறச் சேலையும் மஞ்சள் நிறச்சட்டையும் அணிந்திருந்தார். உடலில் வெட்டுக் காயங்களும் இரத்தக்கறையும் காணப்பட்டன. நான் அவரைத் தட்டிப் பார்த்தபொழுது உடலில் சிறிது சூடு காணப்பட்டது. மேலெங்கும் பல வெட்டுக் காயங்கள் இருந்தன. கதைத்துப்பார்த்தேன். பதிலில்லை. உடனே வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தேன். நிலத்தில் இரண்டு அடிசுற்றளவிற்கு இரத்தக்கறைபடிந்திருந்தது. ஒரு கைக்குழந்தை "சேவயர் காம்ப்" அருகில்கிடந்தது அந்தக் குழந்தையையும் வைத்தியசாலைக்கு அனுப்பினேன். அந்த இடத்தில வைத்து நீதவான்கள் திரு. எஸ். தி. திருநாவுக்கரசு ஆகியவர்களினதும் எதிரியினதும் வாக்குமூலத்தைப் பதிவு செய்தேன்" வேறு சிலரும் சாட்சியமளித்தபின் மேல் விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் வழக்கறிஞர் எவரும் ஆஜராகவில்லை வழக்காளிசார்பில் கிளிநொச்சி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எம். யு. ரட்ணாயகா வழக்கை நடத்தினர்.

## 'பயமுறுத்தலுக்கு பணியமாட்டோம்'

— சுகாதார மந்திரி

கொட்டாவா, புதன்

"மக்களின் தீர்ப்பிற்கு நாங்கள் தலைவணங்குவோமேயல்லாது காடைத்தனத்திற்கோ அல்லது பயமுறுத்தல்களுக்கோ நாம் பணிந்து விடமாட்டோம்" என்று சுகாதார மந்திரி திரு. எம். டி. எச். ஜெயவர்த்தன தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பொன்றில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

REGAL — JAFFNA
NOW SHOWING
Kenneth More
in
SOME PEOPLE
(Eastman color)

இன்று முதல்
மகத்தான ஆரம்பம்!

கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | கெப்பிட்டல் (கொட்டாஞ்சேனை)
நவா (கும்பனித்தெரு) | விஜயா (மட்டக்களப்பு) | மொடர்ன் (பண்டாரவளை)
விஜிதா (ஹட்டன்) | தீவொலி (நுவரேலியா) | ஜூப்பிட்டர் (குருநாகலை)

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 6-30, 9-30

புரட்சி நடிகர்
எம். ஜி. ராமச்சந்திரன்
சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
வேட்டைக்காரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடபகுதி அசைஸ் விசாரணை

# பருத்தித்துறை கொலை வழக்கில் எதிரி விடுதலை

## ஒரு மணி நேரத்தில் விசாரணை முடிந்தது

யாழ்ப்பாணம், வியா

60 நிமிடங்களில் வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நேற்று ஒரு கொலைவழக்கு விசாரணை நடைபெற்று தீர்ப்பும்வழங்கப் பட்டது. இக் கொலைவழக்கில் கொலையுண்டவர் தகப்பனர், எதிரி மகன்; சாட்சியமளித்த வர் தாயார்!

இரு டாக்டர்கள், ஒரு பொலிஸ் சார்ஜண்ட், மரண விசாரணை அதிகாரி, கோயில் பூசாரி, எதிரியின் தாயார் ஆகியோர் சாட்சியமளித்தது; அவர்கள் எதிரியின் வழக்கறிஞரால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டது; முடிக்குரிய வழக்கறிஞர்; எதிரியின் வழக்கறிஞர்; நீதியரசர் ஆகியோர் தொகுப்புரை நிகழ்த்தியது; ஜூரிகள் மந்திராலோசனை செய்து தங்கள் முடிவைத் தெரிவித்தது; கடைசியில் நீதியரசர் தீர்ப்பு வழங்கியது எல்லாம் 60 நிமிடத்திற்குள் நடந்தேறியது.

நீதியரசர் திரு. டி. ஸ்ரீஸ்கந்தராசா முன்னிலையில் பருத்தித்துறை கொலை வழக்கு நேற்றுக் காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபின், நீதியரசர் ஜூரிசபையினரின் முடிவை ஏற்றுக்கொண்டு, எதிரியை விடுதலைசெய்து, மந்திரியிடமிருந்து உத்தரவுவரும்வரை அவரை யாழ்ப்பாணம் பிலகால் பாதுகாப்பில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

ஜூரிசபையினர் மந்திராலோசனை செய்தபின் எதிரி தகப்பனரைக் கத்தியால் குத்தி மரணத்தை ஏற்படுத்தினரென்றும் அவர் சித்தசுவாதீனமற்றிருந்தால் குற்றவாளியல்லவென்றும் ஏகமனதாகத் தெரிவித்தனர்.

இவ்வழக்கில் 1664-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30-ம் திகதி பருத்தித்துறை காமாட்சி அம்மன் கோவில் மடத்தில் பொன்டிச்ற் என்பவர், அவரது தகப்பனர் குமைமுத்துவை கொலைசெய்ததாக குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிக்காக வழக்கறிஞர் திரு எஸ. சரவணமுத்து, திரு. ஆர். ஆர். நல்லையவின் உதவியுடனும் திரு. எஸ, அம்பலவாணரின் அனுசரணையுடனும் ஆஜரானர். எதிரிக்காக அரசாங்கத்தரவில் திரு எஸ. அமிர்தலிங்கம் நியமிக்கப்பட்டிருந்தார்

கொலையுண்டவரின் மனைவியும், எதிரியின் தாயுமான மரியம்மா சாட்சியமளித்தபோது கூறியதாவது:

காலஞ்சென்றவர் எனது கணவர், எதிரி எனது மகன் கணவன் குத்தப்பட்ட தினம் எனக்கு ஞாபகமிருக்கிறது இரண்டுவருடகாலமாக எனது மகன் மூளைக்கோளாறினால் கஷ்டப்பட்டார், பல வைத்தியர்களிடம் அழைத்துச் சென்றேம், மகன் சாப்பிடுவதில்லை. திடீரென ஓடுவார் தனிமையில் பேசிக்கொள்வார். சட்டிபானைகளை மட்டுமன்றி எங்களையும் கையில் அகப்பட்ட பொருளைக்கொண்டு அடிப்பார். சம்பவம் நடந்த போது எதிரியும் காலஞ்சென்றவரும் மடத்தில் இருந்தார்கள்.

எதிரியின் வழக்கறிஞர் குறுக்குவிசாரணை செய்தபோது சாட்சி கூறியதாவது:-

பட்டக்கணப்பிலுள்ள ஒரு வைத்தியரிடமும் மகனைக் கூட்டிச்சென்றேம். மகன் அந்த வைத்தியரின் கையில் கடித்து விட்டார். எனக்கும் தகப்பனருக்கும் பேத்தியாருக்கும் மகன் அடிக்கடி அடிப்பது வழக்கம். சிலநேரங்களில் தனது உடைகளை எல்லாம் கழற்றி எறிந்துவிடுவார். எனது மகனுக்கு 35 வயது.

நீதியரசர்: வருத்தம் வருமுன்பு மகன் என்ன வேலை செய்து கொண்டிருந்தார்?—

கடை வைத்திருந்தார்

நீதிய: என்ன வகுப்புவரை மகன் படித்திருக்கிறார்?— 8-ம் வகுப்புவரை.

காமாட்சி அம்மன் கோவில் பூசாரி கு. கார்த்திகேசு சாட்சியமளித்தபோது கூறியதாவது:-

சம்பவம் நடந்தபோது நான் பருத்தித்துறை காமாட்சி அம்மன் கோவிலில் பூசைசெய்து வந்தேன். அங்கு ஒரு மடம் உண்டு. எதிரியையும் இறந்தவரையும் எனக்குத் தெரியும் சம்பவம் நடந்தினம் மாலை 5 மணிக்கு மடத்தில் சத்தம் கேட்டது. நான் அந்நேரத்தில் எனது அறையில் இருந்தேன் குரலை என்னுல் அடையாளம் காணமுடியவில்லை நான் உடனே மடத்திற்கு ஓடிச்சென்றேன். காலஞ்சென்றவர் நிலத்தில் கிடந்தார் எதிரி அருகில் கையில் கத்தியுடன் நின்றர். நான் 'ஐயோ' என்று சத்தம்போட்டதும் எதிரி ஓடினர். அங்கு வந்தவர்கள் எதிரியைப்பிடித்து வந்தார்கள், எதிரியை பொலிஸவரும்வரை கோவிலில் வைத்திருந்தோம். எதிரிக்கு சுகமில்லையென்று மடத்தில் வைத்திருந்தார்கள். இக் கோவில் புதுமையானது கையால், மூளைக்கோளாறுள்ளவர்கள் இங்கு வந்து தங்குவது வழக்கம்.

எதிரியின் வழக்கறிஞர் குறுக்குவிசாரணை செய்தபோது, எதிரிக்கு மந்திரம் ஜெபித்து தான் கையில் நூல் முடித்ததாகவும் எதிரிக்கு நடுக்கம், வலிப்பு இருப்பதாக காலஞ்சென்றவர் தன்னிடம் கூறியதாகவும் சாட்சி கூறினர்.

மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ. ரத்தினம் சாட்சியமளித்தபோது காலஞ்சென்றவர் இறப்பதற்குமுன் அளித்த வாக்குமூலத்தை வாசித்தார். அவ்வாக்குமூலத்தில் காலஞ்சென்றவர் கூறியிருந்ததாவது: எனது மகனுக்கு மூளைக்கோளாறு காரணமாக சம்பவம் நடப்பதற்கு எட்டு நாட்களுக்கு முன் அக் கோவிலுக்கு கூட்டிச் சென்றேன் சம்பவம் நடந்தினம் மாலை எனது மகன் தனக்கு பயமாக இருப்பதாக கூறி என்னை அருகில் இருக்கும்படி கேட்டுக்கொண்டார், நான் அவர் அருகில் இருந்தேன், அவர் ஒரு கத்தியால் என்னைக் குத்தினர், அந்தக்கத்தியை அவர் எங்கிருந்து எடுத்தாரென்று எனக்குத் தெரியாது. நான் கூச்சலிட்டதும் ஆட்கள் வந்தார்கள், மகன் ஓடிவிட்டார். எனது மகன் என்னுடன் கோபமாக இருக்கவில்லை, 2 வருடகாலமாக அவர் மூளைக்கோளாறினால் பாதிக்கப்பட்டிருந்தார்,

அக்கொடை மனநோய் ஆஸ்பத்திரியைச்சேர்ந்த டாக்டர் ஆர். நடராசா சாட்சியமளித்தபோது எதிரி தன் மேற்பார்வையில் சிலகாலம் இருந்தாரென்றும் சம்பவம் நடந்தபோது அவர் மனநோயால் பீடிக்கப்பட்டிருக்காரென்றும், சில சமயம் அவர் அழுதாரென்றும் கூறினர்.

டாக்டர் எஸ. சிவஞானசுந்தரம்பொலிஸ சார்ஜண்ட் எஸ. ராசையா ஆகியோரும் சாட்சியமளித்தார்கள்.

வழக்கறிஞர்கள், நீதியரசர் ஆகியோரின் தொகுப்புரை முடிவானதும் ஜூரிசபையினர் தெரிவித்த முடிவை ஏற்றுக் கொண்ட நீதியரசர் தீர்ப்பு வழங்கினர்.

## விசாரணைகமிஷனை நியமிக்க கோரிக்கை

கொழும்பு, புதன்

கடந்த ஐந்து வருட காலங்களிலும் கல்வி இலாகாவில் உள்ள வித்தியாதரிசி தொடக்கம் வித்தியாதிபதிவரையான பதவிகளுக்கென இடம்பெற்ற நியமனங்கள் பதவி உயர்வுகள் பற்றி விசாரிக்க ஒரு விசாரணைக் குழுவை நியமிக்கவேண்டும் எனக் கல்வி நிர்வாக சேவைச் சங்கத்தின் விசேடக் கூட்டமொன்றில் தீர்மானிக்கப்பட்டது. இதுகுறித்து மந்திரிக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்துவருட காலத்திலும் இப்பதவிகளுக்கு இடம்பெற்ற நியமனங்களிலும், பதவி உயர்வுகளிலும் அரசியல் காரணங்களே கவனிக்கப்பட்டன என்றும் சேவை மூப்போ அன்றி தகுதியோ சிறிதளவேனும் கவனிக்கப்படவில்லை என்றும் அத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நியமனங்களில் மொழி, சமய, சாதி வேற்றுமைகளை கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப் பட்டதாகவும் தீர்மானம் தெரிவிக்கிறது.

## இன்று

கரவெட்டி கிராயப்பிள்ளையார் கோவில் மகாபாரத விரிவுரையில் வி. எஸ. எஸ். மணிபாகவதர் பாஞ்சாலிசபதம்.

## யு. என் பி. கிளைக் கூட்டம்

பருத்தித்துறை, புதன்

ஐக்கியதேசியக் கட்சியின் வடமராட்சிக் கிளையின் நிர்வாகசபைக் கூட்டம் நேற்று முன்தினம் மாலை அதன் தலைவர் திரு எஸ. சபாபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றபோது கிளைக்கு நிரந்தரமான புதிய காரியாலயம் ஒன்றை விரைவில் திறப்பதெனவும் இவ்வைபவத்துக்கு ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை அழைப்பதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

பிரதமர் திரு டட்லி சேனநாயக்கா யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் போது அவருக்கு கிளையின சார்பில் மாபெரும் வரவேற்பொன்றளித்துக் கௌரவிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## முன்னுள் உதவி..

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

வழிமறித்ததாகவும், காருக்குள் இருந்த இருவர் இட்டு கட்டளைப்படி மூன்றுமவர் ஒருவர் தனது பேனவை பறித்தும் என்பலப்பில் இருந்த 62 ரூபாவையும் பறித்துடன், தனது காரையும் சேதப்படுத்தியதாகவும் மூவர் மீதும் வழக்கு தொடர்ந்திருந்தார். இன்று இவ்வழக்கு கொழும்பு அடிஷனல் மாஜிஸ்திரேட் முன்னிலையில் இன்று காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. மூன்று எதிரிகளையும் தலா 1000 ரூபா பிணையில் செல்ல மாஜிஸ்டிரேட் அனுமதித்து விசாரணையை இம் மாதம் 21-ந் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

## நைக்கெட்டியநு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உடனடியாக அப்படிச் செய்யமுடியாவிடில் மேலதிகமாக இரண்டு பல்கலைக்கழக விடுதிகள் அமைக்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

பரீட்சையில் சித்தியடைந்த போதிலும், இடவசதியின்மை காரணமாக கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத நிலைமை உண்மையிலே ஏற்படுமா அன்றி அரசினர் [illegible] எதிர் [illegible] பார்த்திருக்க வேண்டும் [illegible] பார்க்கவேண்டும்.

# 15 புதிய நிரந்தர காரியதரிசிகள் நியமனம்

கொழும்பு, புதன்

15 புதிய நிரந்தரக் காரியதரிசிகளின் பெயர் நேற்றிரவு கெஸட்டில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. விபரம் வருமாறு:

திரு. எம். இராஜேந்திரா தேசியசேவை அமைச்சு, திரு ஜீ. பி. தம்பையா—பொதுவேலை, தந்தி அமைச்சு. திரு எம். ஸ்ரீ காந்தா—காணி நீர்ப்பாசன அமைச்சு, திரு வி பாலசிங்கம்—சுகாதார அமைச்சு திரு பி. மகாதேவவா—விவசாயஅமைச்சு, திரு. ஜே. வி. பி. சமரசிங்க—பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு திரு. ஜே எல். ச பெர்னண்டோ—ராஜாங்க அமைச்சு, திரு சில்வா—வர்த்தகஅமைச்சு திரு எச். வி. குணவர்த்தன—உள்நாட்டுஅமைச்சு, திரு ஈ. ஜி குணவர்த்தன—சமூக சேவை அமைச்சு. திரு எம், நி பெரேரா—கல்விஅமைச்சு, திரு ஏ வீரசிங்க—தொழில், வேலை அமைச்சு, திரு. ஏ. ஈ. மொறகொடை—ஸ்தலஸ்தாபன அமைச்சு, திரு எஸ். ஜே. வல்பிட்ட—போக்குவரத்து, கடற்தொழிலுக்கும். திரு வல்பிட்ட நிரந்தரக் காரியதரிசியாக இருப்பார்.

நிதி, நீதி அமைச்சின் நிரந்தரக காரியதரிசி பதவிகளில் மாற்றம் இல்லை.

## தொண்டமான் - சாஸ்திரி பேச்சு

புதுடில்லி ஏப். 7

இங்கு விஜயம் செய்துள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ. தொண்டமான் இன்று பிரதமர் சாஸ்திரியைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினர். சாஸ்திரி - ஸ்ரீமா ஒப்பந்தத்தை நிறைவேற்றுவது குறித்து இவர்கள் பேச்சுநடத்தினர்கள். பிரஜாவுரிமை பிரச்னை தீர்க்கப்படவேண்டும் என்றும் சட்டவிரோதக்குடியேற்றக்காரர்களை தற்காலிகமாக தடுப்பு முகாம்களில் வைத்திருக்காது அவர்களின்மீது உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. தொண்டமான் கேட்டுக்கொண்டார்.

## புதுவருட ரயில் சேவைகள்

கொழும்பு, புதன்

தமிழ் - சிங்கள புதுவருடத்தையொட்டி விசேஷ ரயில் சேவை வேண்டும் என திரு. எஸ. ஜே. வி. செல்வநாயகம் விடுத்த கோரிக்கையை ரயில்வே ஜெனரல் மனேஜர் ஏற்றுள்ளார்.

இம்மாதம் 10-ந் திகதியும் 18-ந் திகதியும் விசேஷ ரயில் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. 10-ந் திகதி: கொழும்பிலிருந்து நண்பகல் 1-15க்கு காங்கேசன்துறைக்குப் புறப்படும். இந்த ரயில் யாழ்ப்பாணத்தை 9-02க்கும் காங்கேசன்துறையை 9-30க்கும் சென்றடையும். 18-ந்திகதி: இரவு நேரத்தில் இரண்டு விசேஷ ரயில்கள் சேவையில் விடப்படும். பிரயாணிகளின் வசதிக்கேற்ப மற்றுமொரு ரயிலும் சேவைக்கு விடப்படும்.

## சைக்கிள் ஓட்ட போட்டி

உடுப்பிட்டி, புதன்

வட்சருணை வளர்மதி விளையாட்டுச் சமூகத் தினகரன் 25 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி இம்மாதம் 14-ந் திகதி புதன்கிழமை நடைபெறவிருக்கிறது.

## 'வேலையிலிருந்து விலக்காதீ'

### மந்திரி உத்தரவு

கொழும்பு, புதன்

கூட்டுறவு மொத்த ஸ்தாபனத்துக்கு அண்மையில் சில புதிய நியமனங்கள் செய்யப்பட்டிருந்தன. இந்த நியமனம் சம்பந்தமாக தேர்தல் நடைபெறுவதற்கு முன்னரே சில புகார் கிளப்பப்பட்டிருந்தன. இப் புதிய நியமனங்களில் தெரிவு செய்யப்பட்டவர்களில் அடிப்படை தகுதி உள்ளவர்களை வேலையிலிருந்து விலக்கக்கூடாது என வர்த்தகமந்திரி டாக்டர் எம். வி பி. பீரிஸ் உத்தரவிட்டுள்ளார்.

## உத்தியோகமொழி உத்தியோகஸ்தர்

கொழும்பு, புதன்

திறைசேரியில் உள்ள உத்தியோகமொழி விவகாரங்களுக்கு பொறுப்பாக திரு. விமலி நவரத்னவா நியமிக்கப்பட்டுள்ளார்; இவர் கடந்த இரண்டு மாதங்களாக திறைசேரியில் கடமையாற்றுகிறார். அதற்குமுன்னர் மொனறகலை அரசாங்க அதிபராக கடமையாற்றினர்.

## மந்திரியின் முயற்சி

பமபலபிட்டி, புதன்

இலங்கை விமான போக்குவரத்துச் சேவை நிர்வாகத்தை முற்றிலும் சீர்திருத்தி அமைக்க போக்குவரத்து மந்திரி திரு ஈ ஏல் பி குருனு தீர்மானித்துள்ளார், இதைமுன்னிட்டு உயர் பதவி வகிக்கும் சில உத்தியோகத்தர்கள் மாற்றம் செய்யப்படலாமென நம்பப்படுகிறது,

நிர்வாகத்தை சீர்திருத்தி அமைக்கும் முயற்சியில் தாம் ஓயசேகரா அறிக்கையை கவனமாக ஆராய்ந்துவருவதாக மந்திரி தெரிவித்துள்ளார்,

தேவை

விஞ்ஞானம், கணிதப் பாடங்கள் ஜீ சி. ஈ. சாதாரண உயர்தர வகுப்புகளுக்குப் பிற்படுவதற்கு பட்டதாரிகள் தேவை. ஆண், பெண் நேரில் விண்ணப்பிக்கவும். அதிபர், செனற் போல்ஸ கல்லூரி, கே. கே. எஸ். வீதி, கொக்குவில். 29

## மரண அறிவித்தல்

### ந. பொன்னம்பலம்

ஐயாத்துரை குலசேகரம்பிள்ளையின் (யாழ்ப்பாணம் கூட்டுறவு துறைமுகத் தொழிலாளர் சங்க உதவி மேற்பார்வையாளர்) மைத்துனரும், நெடுந்தீவு மேற்கு முருகேசு நமசிவாயத்தின் மகனும் முருகேசு சின்னத்துரை (ஆசிரியர் சரஸ்வதி வித்தியாசாலை, நாவலப்பிட்டி), முருகேசு காங்கேசு ஆகியோரின் பெருமகனும் மானிப்பாய் கிறீன் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த மஹேன்மணி நமசிவாயத்தின் சகோதரரும் நாகேந்திரனின் மைத்துனருமான பொன்னம்பலம் (நெடுந்தீவு கிழக்கு கிராம சேவகர்) காலமானர். அன்னாரின் தகனக்கிரியை நெடுந்தீவு மேற்கு மயானத்தில் நடைபெறும்,

தகவல்: ஐ. குலசேகரம்பிள்ளை 30

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 18-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org